# வியாழ மாற்றம்

02/09/2017 தொடக்கம் 02/09/2018 வரை

---

# இராகு கேது மாற்றம்

28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை

---

# சனீஸ்வர மாற்றம்

19/12/2017 தொடக்கம் 19/06/2020 வரை

---


அரச விருது பெற்ற சோதிடர்

**V.A சிவராசா, B.A, B.Phil, Dip.In.Ed**

56, அம்மன் றோட், கந்தர்மடம்

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: **021 222 8708**


**20/-**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரே பார்வையில் கிரகங்களின் கோசர நிலைமைகள்

| இராசிகள் | சனி மாற்றம் 19/12/2017 – 19/06/2020 | வியாழ மாற்றம் 02/09/2017 – 02/09/2018 | ராகு, கேது மாற்றம் 28/07/2017 – 28/01/2019 | |
|---|---|---|---|---|
| மேடம் | 09 | 07 | 04 | 10 |
| இடபம் | 08 | 06 | 03 | 09 |
| மிதுனம் | 07 | 05 | 02 | 08 |
| கடகம் | 06 | 04 | 01 | 07 |
| சிங்கம் | 05 | 03 | 12 | 06 |
| கன்னி | 04 | 02 | 11 | 05 |
| துலாம் | 03 | 01 | 10 | 04 |
| விருச்சிகம் | 02 | 12 | 09 | 03 |
| தனு | 01 | 11 | 08 | 02 |
| மகரம் | 12 | 10 | 07 | 01 |
| கும்பம் | 11 | 09 | 06 | 12 |
| மீனம் | 10 | 08 | 05 | 11 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேடம்

## (அஸ்வினி, பரணி, கார்த்திகை1)

தெய்வ செயலாக அட்டமத்துச் சனி (8) நீங்கிவிட்டதே நொந்த உள்ளத்திற்கு பெரிய ஆறுதல் தரும் விடயமாகும். சனீஸ்வரன் பாக்கிய சனியாக (9) 19/12/2017 தொடக்கம் 2½ ஆண்டுகளுக்கு 19/06/2020 வரை உங்களுக்கு அளப்பரிய நன்மைகளைச் செய்யப் போகின்றார். விதி நாதனின் (சனி) 03/07/ 10ம் பார்வைகளும் துன்பத்தினின்றும் உங்களைக் கரையேற்றி விடும். ஆஞ்சநேயரை வழிபடுங்கள் நாடிவரும் கஷ்டங்கள் பறந்தோடி விடும்.

ஜாதகப் பொருத்தம் திருமணத்திற்காக பார்க்கும்போது புறோக்கர்மார் கூறுவதை ஆராய்ந்த பின்னரே முடிவெடுங்கள். செய்தியாளர்களுக்கு சோதனையும், வேதனையும் ஏற்படலாம். உங்கள் பிறந்த திகதிக்கேற்ற இரத்தினக்கற்களை அணியின் அதிஷ்டகரமான வாழ்வு தேடி வரும். 1ம் எண்ணுக்கு மாணிக்கக்கல், 2ம் எண்ணுக்குமுத்து, 3ம் எண்ணுக்கு மஞ்சள் புட்பராகம் அல்லது செவ்வந்தி, 4ம் எண்ணுக்கு கோமேதகம், 5ம் எண்ணுக்கு வைரம் அல்லது நீலவெள்ளை, 6ம் எண்ணுக்கு மரகதப் பச்சை, 7ம் எண்ணுக்கு வைடூரியம், 8ம் எண்ணுக்கு இந்திர நீலக்கல், 9ம் எண்ணுக்கு பவளம். தோலுடன் கற்கள் முட்டும்படி அமைதல் வேண்டும்.

வாக்கிய பஞ்சாங்கப்படி, 02/09/2017 தொடக்கம் ஒரு வருடத்திற்கு வியாழன் 7ம் இடத்திற்கு வந்து இன்ப சுகங்களை அள்ளித் தருவார். மண விலக்குப் பெறும் யோசனையைச் சிலர் ஒத்தி வைப்பர். கைபேசி மூலம் காதல் உறவு மலரும். குடியுரிமை பெறுவதற்காக காகித திருமணத்தில் மனம் வைப்பார்கள். குடும்பத்தில் புதிய ஜீவன் தோன்றலாம். பரீட்சை சித்தியினால் பதவி உயர்வு, தொழில் வாய்ப்பு, புலமைப்பரிசிலும் கிட்டலாம். சுவீப் அதிர்ஷ்டமுண்டு.

28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை ராகு 4ல் கேது 10ல் நிற்பதனால் செய்தொழிலை உயிரினும் மேலாகப் பேணவும், தாயாரின் நோய்களில் கூடிய கவனம் எடுங்கள், அனுமதி பெறுவதற்காக அலைச்சலும், அகால போஜனமும் ஏற்படும். பிறர் உதவினால் மட்டுமே வெளிநாட்டுப் பிரயாணத்தை நாடவும், பழைய மனையை இடித்துவிட்டு புதிதாக கட்ட ஆரம்பித்தல், வருமானத்தின் ஒரு பகுதி மருத்துவச் செலவிற்குப் போய்விடலாம், பிரிவுத் துயர் வாட்டும், நட்டம் காரணமாக தொழிலைக் கைவிட்டுவிடல், பாதுகாப்பில் கவனம் எடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடபம்

## (கார்த்திகை 2,3,4,/ ரோகிணி, மிருகசீரிடம் 1,2)

கடவுளே! அஷ்டமத்துச் சனி (8) வருகின்றது. சனீஸ்வரன் இடப ராசியில் நட்பு பெற்ற படியினால், மலைபோல் வருஞ்சோதனைகள் கடுகாகிப் போய்விடும். உங்கள் ஜாதகத்தில் சனி நல்ல இடத்தில் இருந்தாலும் நடப்பு மகாதெசா புத்தி நன்றாக இருப்பினும் புதிய விடயங்களில் நம்பிக்கை வையுங்கள்.

சனீஸ்வர விரதம் வழிபாட்டைக் கைவிட வேண்டாம். ஆஞ்சநேயரையும் மறக்காது; நாடி வருகின்ற எத்தைகைய துயரையும் எதிர்கொண்டு துணிவுடன் நின்றால் நன்மை நிச்சயமுண்டாம்.

பூக் கட்டிப்பார்த்துச் செய்யப்படும் விவாகம் நம்பகத்தன்மை அற்றுப் போகலாம்.தெய்வ விரதங்கள் வழிபாடுகள் செய்வதன் மூலம் நன்மைகளும், முன்னேற்றமும் ஏற்படும். எழுத்துத் துறையில் மற்றும் புதியன கண்டுபிடிப்பதிலும் ஆர்வம் பிறக்கும். பெற்றோரின் புத்திமதிகள் கேட்டு நடப்பின் நாடிவரும் துயரங்கள் காதவழி ஓடிவிடும். பெற்றோர் செய்யும் பாவங்களால் பிறக்கின்ற பிள்ளைகளுக்கு குறைபாடுகள் தக்க வைக்கும். சமாதான நீதிபதி முதலான கௌரவ பதவிகள் ஏற்படும். வாகனம் ஓடிப்பழகி உரிமம் எடுக்க விருப்பம் தோன்றும்.

02/09/2017 தொடக்கம் 02/09/2018 வரை ஆறாம் வீட்டிலே குரு வந்தபோது வச்சிர முனிவர் விலங்கு பூண்டது போல செய்யாத குற்றத்திற்கு தண்டனை பெறல், திருடர் தொல்லை, சத்துருக்களினால் கெடுதி, முலாம் பூசிய ஆபரணங்கள் வந்தடைதல், கள்ள நோட்டுக்கள் பற்றி விழிப்படைதல், திகதி தப்பிய பொருட்கள் அகப்படல், சத்திர சிகிச்சை எதிர்பாராது ஏற்படல், வளர்ப்பு மிருகங்களின் தாக்கம், தனித்து செல்வதனால் உடைமைகள் பறிமுதலாகுதல், விபத்துக்கள் பற்றியும் எச்சரிக்கையாய் இருத்தல்.

இராகுவும், கேதுவும் முறையே 28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை 3லும், 9லும் நின்று உங்களை வெற்றிப்படிகளில் ஏற்றிவிடப் போகின்றார்கள். சகோதரர்களின் உதவி பொறுத்த கட்டத்தில் கைதூக்கி விடும். நோய்கள் குணமடையும். பிதாவின் கருணையினால் தொழில் முயற்சிகளுக்கு சாதகமான நிலை உருவாகும்.நிலுவைகள் படிப்படியாக கைக்கெட்டும். மஞ்சட் கடவை மற்றும் புகையிரத்தாலும் விபத்துக்களில் கவனம் எடுங்கள். சத்திர சிகிச்சைக்காக சிலர் வெளிநாடு செல்லல். தத்துப்புத்திர யோகத்தில் மனம் வைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதுனம்

## (மிருகசீரிடம் 3,4/ திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)

கண்டகச் சனி (7) கழுத்தறுக்க வருகின்றார் எனக் கலங்க வேண்டாம். சனீஸ்வரன் சங்கடங்களைத் தீர்த்து சரித்திரம் படைக்க வைப்பார். 19/12/2017 தொடக்கம் 19/06/2019 வரை 7இல் நிற்கும் சனீஸ்வரன் பிரிவுத் துயரை ஏற்படுத்த முயன்றாலும் ஈற்றில் நன்மையே விளையும். பயணங்கள் ஆரம்பத்தில் இழுபட்டாலும் முயல் வேகத்தில் வெற்றி கிட்டி விடும். சொத்துப் பிரச்சினையால் குடும்ப உறவில் விரிசல்கள் தாண்டவமாடும். தம்பதியர் மற்றும் சிநேகிதர் உறவினர் மத்தியில் கருத்து மோதல்கள் ஏற்படலாம்.

விடைத்தாள்களை திருத்த முற்படுகையில் மதுபானப் பாவனை புள்ளிகளை பாதிக்கும். தென்புலத்தாருக்கு செய்யும் சடங்கினால் துன்பதுயரங்கள் விலகிப் போய்விடும். சனீஸ்வரனின் அருளைப் பெற ஆஞ்சநேயரையும், குருபகவானுக்கு தெட்சணா மூர்த்தி வழிபாடும், ராகுவிற்கு துர்க்கையையும், கேதுவிற்கு திருக்கேதீஸ்வரத்தானையும் பூசித்து வாருங்கள். பழைய ஜாதகங்களில் பல பிழைகள் காணப்படுவதினால் திரும்பவும் சரியாகக் கணியுங்கள். ஏமாற்றப்பட்ட கன்னியர்கள் விடுகின்ற கண்ணீரானது சாபங்களாகி பின் தோஷங்களாகி வருத்திக் கொண்டேயிருக்கும். பிள்ளைகளை கடத்தி வைத்துக் கப்பம் கேட்க முயலலாம்.

வியாழன் கோசர நிலையில் 5ம் இடத்திற்கு 02/09/2017 தொடக்கம் ஒரு வருடம் வரைசஞ்சாரம் செய்யுங் காலத்தில் பதவிகள் கிட்டும். நிலுவைகள் வந்து சேரும். தம்பதியர் மத்தியில் நிலவிய பிணக்குகள் அற்றுப் போகும். மாமன்மாரின் கருணையால் புதியன கிட்டும். மேலும், ஒரு வியாபார கிளை நிறுவனம் திறத்தல், மாதாவின் தேகநலம் மேம்படைதல் எதிரிகளின் தொல்லை நீங்குதல், கல்விப் பெறுபேற்றினால் உயர்நிலைக்கு வருதல், நோய்க்காக செலவழித்த பணத்தின் ஒரு பகுதி ஜனாதிபதி மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் கிடைக்கும்.

இராகு, கேது சர்ப்பக் கிரகங்கள் 28/07/2017 தொட்டு 28/01/2019 வரை 2ம்,8ம் நிலையில் நின்று முயற்சிகளுக்கு தடை தாமதம் இடையூறுகளை ஏற்படுத்தி விடலாம். சிலர் குடும்பத்தைக் கைவிட்டு வேறு தாரத்தை நாடிவிடல், கௌரவம் காரணமாக பங்குத் தொழிலை முறித்து விடல், சர்ப்பக் கடியில் கவனம் எடுக்கவும். சுரண்டல் மூலம் சிலருக்கு பணம் கிடைக்கலாம், திருமணம்/வெளியூர் பயணம் என்பன ஜாதகத்தில் திசாபுத்தி நன்றெனின் ஈடுபடலாம். கருங்குளவிகளின் தாக்கத்தில் எச்சரிக்கையாக இருங்கள். நண்பர்களினால் மோசடி ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கடகம்

## (புனர்பூசம் 4, பூசம்,ஆயிலியம்)

தெய்வ செயலாக ஐந்தில் சனி விலகி சத்துரு சங்கார சனீஸ்வரனாக 6ம் இடத்தில் 19/12/2017 தொடக்கம் 19/06/2020ம் ஆண்டு வரை உங்களுக்கு நன்மைப் பலாபலன்களுடன் முன்னேற்றத்தையும் தரும் கோசார நிலையில் காகமேறுந்தம்பிரான் சனீஸ்வரன் தழுவப் போகின்றார். எதிர்ப்புக்கள் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்து விடும். பயண முயற்சிகள் அந்த மாதிரி நிறைவேறல், நோய்கள் குணமடையும், பொறுப்பின்றிக் கொடுத்தவை கைக்கெட்டும். மாமன்மாரின் உதவிகளினால் வாழ்வில் வசந்தகாலம் பிறக்கும்.

நாகதோஷம், காலசர்ப்பதோஷம், குருசண்டாள தோஷமுடையவர்களின் கல்வி, தொழில், நோய்கள் திருமணம் என்பன பாதிப்படைவதனால் நாகவிளக்கினை சாமி அறையில் ஏற்றி வழிபட்டு வர தோஷங்கள் நீங்கி நன்மையும், முன்னேற்றமும் ஏற்படும். 8ம் இடத்தில் சந்திரன் இருப்பின் நீர்க்கண்டத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். நிலுவை கூடியதால் தொலைபேசி, மின்சார இணைப்புக்கள் துண்டிக்கப்படலாம். வாஸ்து சோதிட முறைப்படி வீடு கட்டினால் செல்வமும், அதிர்ஷ்டமும் ஏற்படும்.

தர்ம புத்திரரை வனவாசம் செய்ய வைத்த 4ல் குரு 02/09/2017 தொடக்கம் ஒரு வருடம் வரை இருப்பதினால் நட்டநிலை காரணமாக செய்தொழிலை மூட வேண்டி நேரிடலாம். வெளியூர் பயணத்தை ஒத்தி வைத்தல், பங்குத் தொழிலில் சேர முயற்சி எடுத்தல், பணமின்மையால் விவாகம் தடைப்படல், வியாபாரப் போட்டியால் தகராறுகள் ஏற்படல், பழையதை புதிதுபோல் காட்டி தலையில் கட்டியடிக்க முயல்வார்கள். பிள்ளைகள் விடும் தவறுகளை பவ்வியமான முறையில் கண்டித்து திருத்தப்பாருங்கள். பிறர் விடயங்களில் தலையிட வேண்டாம்.

நிழற் கிரகங்களான ராகு, கேது முறையே 28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை ஜென்மத்திலும் (1) 7லும் நிற்பதினால் நன்மையான பலன்கள் அதிகம் கிட்டாது போய்விடலாம். சிலருக்கு சிறைவாசமும், தடுப்புக் காவலும் தக்க வைக்கும், தம்பதியர் மத்தியில் ஒழுக்கம் காரணமாக சந்தேகம் வலுத்து பிரிவினைக்கு வழியேற்படுத்தலாம், வெளியூர்மற்றும் தொழில் முன்னிட்டு பிரிவினை தோன்றும், சிலர் நோய் குணமடைய தெய்வ தலங்களுக்கு விஜயம் செய்தல். திருமணத்திற்காக வெளிநாடுகளில் நின்றும் மணமக்கள் தாயகத்திற்கு படையெடுப்பார்கள்,நூதனமான நோயொன்று ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கம்

## (மகம்/ பூரம்/ உத்தரம் 1)

ஐந்தில் சனி 19/12/2017 தொடக்கம் 19/06/2020 வரை நெஞ்சில் தேங்கியிருக்கும் சளி போல உங்களை வருத்த நேரிடினும் தெய்வ வணக்கத்தினால் கண்ணுக்கு வரும் துயர் புருவத்துடன் தப்பிவிடும், கல்வி முயற்சிகளில் கூடிய கவனம் எடுக்கவும், பணம் மற்றும் பெண் சம்பந்தமாக மாமன்மாருடன் தகராறுகள் முளைவிடும், பாதுகாப்பில் அதிகூடிய கவனம் எடுங்கள், ஓய்வு பெற்ற பின்னும் மீள் நியமனம் பெற விண்ணப்பித்தல், இடைத்தங்கல் நாட்டைக் கைவிட்டு சிலர் தாயகத்தை நோக்கி வருவார்கள். பொருட் கொள்வனவில் நம்பகத் தன்மை மற்றும் திகதிகளில் கவனம் எடுங்கள்.

சனீஸ்வரன் 19/12/2017 தொடக்கம் மாறினாலும் மாறும் தினத்தில் இருந்து 3 மாதத்திற்கு முன்னரேயே பலாபலன்களை புரியத் தொடங்கிவிடுவார். அவ்வாறே குரு மாற்றம் 02/09/2017 இல் நிகழ்ந்தாலும் ஒரு மாதத்திற்கு முன்னிருந்தும் இராகு, கேதுக்கள் 28/07/2017 இல் மாறினாலும் 1½மாதத்திற்கு முன்னரே பலாபலன்களை புரியத் தொடங்குவார்கள், குருவின் கோசர நிலையை விட அதன் பார்வைப் பலன்களே (5,7,9) கூடியளவு தாக்கத்தை ஏற்படுத்தும், இராகு, கேது 7ம் பார்வையும் சனீஸ்வரன் 03/07/10ம் பார்வையும் கொண்டிருப்பார்கள்.

துரியோதனன் முதலியோரை மாள வைத்த 3ம் வீட்டுக் குரு பகவான் 02/09/2017 தொடக்கம் 02/09/2018 வரை உங்களின் பலாபலன்களை தீர்மானிக்கப் போகின்றார்.சகோதர வழியில் தலையிட்டு வருந்தாதீர்கள். பிறர் உதவினால் மட்டுமே வெளியூர் பயணத்தில் பாதம் வைக்கவும். கர்ப்பச்சிதைவுகள், அரைகுறை பிரசவத்தை சிலர் எதிர்பாருங்கள், வீட்டு வேலைக்கு அமர்த்துவோரில் ஒரு கண் வைத்திருங்கள், வாகனப் போட்டா போட்டியினால் விபத்து தக்க வைக்கலாம். உங்கள் கதிரையில் குந்துவதற்கு சக ஊழியர் ஒருவர் சதி முயற்சியில் ஈடுபடலாம். விஷக்கடியில் எச்சரிக்கையாயிருங்கள்.

சர்ப்பக் கிரகங்களான ராகுவும், கேதுவும் 28/07/2017 தொட்டு 28/01/2019 வரை முறையே 12ல் / 6ல் இருப்பதினால் புதிய முயற்சிகளுக்கு கடன்படுவீர்கள், சிலர் சொத்தினை விற்று வெளிநாடு செல்ல தலைப்படுதல், பொறுப்பின்றிக் கொடுத்த பணத்தினை திரும்பப் பெற திண்டாட வேண்டியிருக்கும். பிதாவின் தேகநலம் எதிர்பாராது பாதிப்படையலாம். கன்னியரால் அவமானம், பண இழப்பு ஏற்படும். மாமன்மாரின் உதவியினால் சிலருக்கு குருட்டு அதிர்ஷ்டமும் வசந்தகாலமும் பிறக்கும், திசாபுத்தி நன்றெனின் புதிய மனை அமைக்க ஆயத்தப்படுத்துங்கள். மயிர்க்கொட்டியின் தாக்கம் ஏற்படலாம், டெங்கு நோயில் கவனமெடுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னி

## (உத்தரம் 2,3,4 / அத்தம் / சித்திரை 1,2)

கண்டக சனியாக 19/12/2017 தொடக்கம் 19/06/2020 வரை சனீஸ்வரன் 4ம் நிலையில் நின்று வாழ்க்கையில் அனுபவித்துக் கொண்டிருக்கும் நன்மைப் பலாபலன்களில் இடையூறுகளை ஏற்படுத்த முயன்றாலும் கன்னி ராசியில் நட்புப் பெற்ற சனீஸ்வரன் நன்மைகளையும் ஏற்படுத்திய வண்ணம் உங்களை அரவணைத்துக் கொள்வார், பெற்றோரின் தேக நலத்தில் கவனம் எடுங்கள், பிறர் உதவினால் மட்டுமே வெளிநாட்டுப் பயணத்தில் நம்பிக்கை வையுங்கள்.

சூரியனும். செவ்வாயும் ஒரு வீட்டில் இருக்கும் கன்னியர்கள் இள வயதில் விவாகம் செய்தால் அமங்கலியாகி விடலாம். வயது சென்ற முதிர் கன்னியர்களுக்கு கலியாணம் நடவாமை எண்ணி பெற்றோர் கண்ணீர் வடித்தல், பொறுப்பின்றிக் கொடுத்த பணத்தை பெறுவதற்கு தெய்வத்தில் பழியைப் போடல், தொழில் நிரந்தரமாகும் கடிதம் கண்டு ஆனந்தக் கூத்தாடுதல், உங்கள் பெயரினை 2,3,4,7,8 ஆகிய நம்பர்களில் ஒரு பொழுதும் வைக்க வேண்டாம். விவாக எழுத்தின் தினத்தின் கூட்டெண் 4,5,8 எண்கள் வராமலும் பார்த்துக் கொள்ளுங்கள். முன்பின் பழக்கமோ, அறிமுகமோ இல்லாத நபர்களை வீட்டுக்கு அழைக்காதீர்கள்.

பொன்னி ராசியாம் கன்னிக்கு ஜென்மத்து வியாழன் நீங்கி 02/09/2017 தொடக்கம் 02/09/2018 வரை 2ம் நிலையில் இருந்து பொன் பொருட்களை அள்ளித்தரப் போகின்றார். இழுபட்ட விவாகம் இனிதே நிறைவேறும், அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்கள் பணத்தை அள்ளித் தரலாம், வெளிநாட்டினின்றும் இரத்த உறவுகள் வருகை தரல், கைவிட்டிருந்த காதல் உறவு மீண்டும் மலர்தல்,வெளியீடுகளில் ஆர்வம் பிறத்தல், மாமன், மருமகன் உறவில் பிரச்சினை ஏற்படலாம். ஐரோப்பிய மொழி கற்கச் செல்லுதல், கலைஞர்கள் விளையாட்டு வீரர்கள் பரிசில் பாராட்டு, கௌரவம் பெறுதல்.

நாகதோஷம், காலச்சர்ப்ப தோஷத்தை ஏற்படுத்தும் ராகு, கேது கிரகங்கள் 28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை முறையே 11ம்,5ம் இடத்தில் நின்று இராஜ யோகம் அனுபவிக்கும் நிலைப்பாட்டைத் தருவார்கள். கைவிட்டிருந்த விவாகம் வெளியூர் பயணம் என்பன அந்த மாதிரி நிறைவேறும், புதிய ஜீவன் உருவாகும், பிறர் சொத்தினை அனுபவிக்கும் நிலை கைகூடி வரும், மூத்த சகோதரியின் உதவியினால் வாகனம் சேரல், பிள்ளைகளின் அழைப்பின் பிரகாரம் பெற்றோருக்கு வெளியூர் செல்லும் சந்தர்ப்பம் தக்க வைக்கும், மனையாள் சம்மதிப்பின் அரசியலில் ஈடுபடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துலாம்

## (சித்திரை 3,4/ சுவாதி / விசாகம் 1,2,3)

நல்ல காலம் பிறக்குது. அதிர்ஷ்டம் தேடி வருகின்றது. ஆம்! உங்களைப் பிடித்தாட்டிய 7½ச் சனியன் 19/12/2017ல் முற்றாக விலகி 2½ ஆண்டுகளுக்கு தைரியம், துணிவு, முன்னேற்றம், நன்மைகளைக் கொடுக்கும் 3ம் இடத்துக்கு நிலை கொள்ளப் போகின்றார். சகோதர்களின் உதவி கிடைப்பதுடன் கைவிட்டிருந்தோர் உறவுக்கு கை நீட்டுவார்கள் நோய்கள் குணமடையும், அரசின் செல்லப்பிள்ளையாக அரவணைக்கப்படுவர். சுவீப் அதிர்ஷ்டமுண்டு. அரசு, தனியார் துறைகளில் பதவிகள் கிட்டிவிடும்.

புழைய நண்பர்களைச் சந்தித்து இளமைக்கால நினைவுகளை மீட்டு மகிழ்ச்சியுறல், பெற்றோரின் வேண்டுதலுக்காக வெளியூர் மோகத்தைக் கைவிட்டு விடல், மின்சார ஒழுக்கில் கவனமெடுங்கள், பழக்கமில்லாதவருக்கு உங்கள் தொலைபேசி எண்களைக் கொடுக்க வேண்டாம், அனுபவமில்லாத தொழில் நடாத்த ஆசைப்பட்டு அல்லற்பட வேண்டாம், பிள்ளைகளினால் அடியும், உதையும் வாங்கும் பெற்றோர்களின் பரிதாப நிலை கண்டு அயலவர் இரக்கப்படுதல், கால நிலையின் பாதிப்பால் விவசாய நடவடிக்கை பாழ்பட்டு போதல், நீண்ட காலம் குடியிருந்த மனையை விட்டு எழும்பிவிடும் துர்ப்பாக்கிய நிலை உண்டாகும்.

சீதா பிராட்டியைச் சிறை வைத்த ஜென்ம வியாழன் (1) 02/09/2017 தொடக்கம் ஒரு வருடம் வரை உங்கள் தலை எழுத்தினை எழுதப் போகிறார். வெளிநாட்டினின்றும்தாய் நாட்டிற்கு வந்திறங்கும் சிலர் அரசால் பிடிபட்டு தண்டனை பெறலாம். போதைப்பொருள் பாவனை / வியாபாரம் / கடத்தல் / விநியோகத்தினால் சட்டத்தின் கரங்களில் சிக்குதல். சிலருக்கு இரண்டாந் தாரமும், முறை தவறிய காதலும், தத்துப் புத்திர யோகமும், கிழட்டு வயதில் காம உணர்வும் ஏற்படலாம். கௌரவ பதவிகள் கிட்டும், ஜாதகத்தில் மோசடி செய்து திருமணம் செய்து வைக்க முயற்சித்தல்.

இராகு, கேது முறையே 28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை 10ம் 4ம் நிலைப்பாட்டில் நின்று முன்னேற்றப்பாதை அமைக்க வழியேற்படுத்தல், இடைத்தங்கல் நாட்டினைக் கைவிட்டு எண்ணிய இலக்கினை அடைதல், விசா பெற்ற பெண்களை கரம் பிடிக்கும் யோகம் உண்டாகும், பங்குத் தொழிலை நாடுதல், தெய்வத் தலங்களுக்கு யாத்திரைகள் மேற்கொள்ளுதல், புதிய மனை அமைக்க சகோதர்கள் உதவி செய்தல், பெற்றோர்களின் நோய்கள் குணமடைதல், நிறம், தோற்றம் காரணமாக திருமணம் இழுபடல், அதிர்ச்சி தரும் செய்தி ஒன்று கேட்க நேரிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருச்சிகம்

(விசாகம் 4 / அனுசம் / கோட்டை)

சனீஸ்வரன் வாக்குச் சனியாக (2) 19/12/2017 தொடக்கம் 19/06/2020 வரை இருக்கும் காலத்தில் அவசரப்பட்டு எந்த முடிவிற்கும் வந்து விடாதீர்கள். சிலருக்கு சிறை வாசம் நிச்சயமுண்டு, நன்கு விசாரணை செய்த பின்னரே மணமக்களைத் தேர்ந்தெடுக்கவும். தம்பதியர் மத்தியில் சுமுகமான உறவுகள் அடிக்கடி பாதிக்கப்படும், தேங்கிய நிலுவைகள் பெற காவல்துறையை நாட வேண்டியிருக்கும், பழைய பகைமைகள் முளை விடலாம். எதிரியை கண்டும் காணாமல் போவதனால் பிரச்சினை அற்றுப் போய்விடும். எய்தவன் இருக்க அம்பை நோவது போல் பிரச்சினைகளை அறிந்து நடப்பின் சந்தேகம் அற்றுப் போய்விடும், கடனை அடைக்க பூர்விகச் சொத்தின் ஒரு பகுதியை விற்க நேரிடல், தொலைந்து போனவர் உயிருடன் உள்ளார் என்ற தகவல் கிட்டும், விவாகத்திற்காக சைவ போஜனத்திற்கு மாறச் சம்மதப்படல், சுற்றாடலை விரும்பாதபடியினால் மனை அமைக்கும் யோசனையை கைவிடல்,பாடங்களை மாற்றி அமைத்து பரீட்சை எழுத மனம் விரும்புதல், கற்பனையை விற்பனையாக்கி பணம் சம்பாதிக்க விரும்புதல்.

இராவணனின் தலை முடியை வீழ்த்திய 12ம் இடத்து வியாழன் 02/09/2017 தொடக்கம் 02/09/2018 வரை உங்களின் செயற்பாடுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தப் போகிறார், பெண்களின் தொடர்பினால் மானம், மரியாதை, கௌரவம் பறந்து விடும். பொறுப்பின்றி எவருக்கும் எதையும் கொடுத்து விடாதீர்கள், சீட்டுப் பிடித்தவர்கள் தலைமறைவாகி விடலாம், இலட்சிய மின்றி திரிய முற்படும் மக்களைப் பற்றிய கவலை வாட்டி வதைக்கும், புதியன கொள்வனவில் நம்பகத் தன்மையில் கவனமாயிருங்கள், சாதி, மதம், இனம் பாராதுதிருமண பந்தத்தில் சிலர் ஈடுபடுவர், வெளிநாட்டைக் கைவிட்டு தாயகத்தில் குடியேற விரும்புதல், நோயில் கவனமெடுங்கள், கிரகங்களின் நிலைக்கு உயர்ச்சி பெற்ற ராகு, கேது என்பன 28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை 9ம், 3ம் கோசரத்தில் நின்று நன்மைப் பலாபலன்களையே அனுபவிக்கச் செய்வார்கள், தீர விசாரித்து மணமக்களை தெரிவு செய்யவும், சொத்துப் பங்கீடு பிதாவின் சமரசத்தினால் சுமுக நிலைக்கு வரும், பிரயாணத்தின் போது அருகில் இருப்பவரில் ஒரு கண் வைத்திருங்கள், கணவர் என நம்பியிருந்தவர் துரோகம் செய்தல், கணக்கு வழக்கில் தில்லு, முல்லு காணப்பட்டதால் வாடிக்கையை முறித்து விடல், பொருட்களை விற்க வருபவர்கள் பற்றி விழிப்பாக இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனு

## (மூலம் / பூராடம் / உத்தராடம் 1)

ஜென்மத்துச் சனியாக 19/12/2017 தொடக்கம் 19/06/2020 வரை சனி 1ம் வீட்டில் நிற்கப் போகின்றார், பிரிவுத்துயர் வாட்டலாம், எடுத்த முயற்சிகள் வெற்றி பெற ஆஞ்சநேயரை துதி பாடுங்கள், காதலில் சோதனையும் சின்ன வீடுகளை குடும்பத் தலைவர்கள் நாடவெளிக்கிட்டு பிரளயத்தை ஏற்படுத்துவார்கள், காதுடன் தொடர்பான நோய்கள் வாட்டியெடுக்கும், பிள்ளைகளின் நடமாட்டங்களை கவனியுங்கள், பிரயாண வேளையில் ஆவணங்கள் தவறியும் விடலாம், நோய் குணமடையும், சிறுவர், சிறுமியர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகலாம், ஜாதகப் பொருத்தமில்லாத தம்பதியர் தத்தம் பெயர்களை அதிர்ஷ்ட எண்களில் அமைப்பதன் மூலம் நல்வாழ்க்கை ஏற்படும், பிறந்த திகதிக்கு ஏற்ற இரத்தினக் கற்களை உடலின் தோலுடன் முட்டும்படி ஆபரணங்களில் பதித்து அணியின் நன்மைகளும், முன்னேற்றமும் ஏற்படும், நோய்கள் குணமடைய யோகப்பியாசம் தியானம் என்பவற்றுடன் தேகப்பியாசத்தையும் கைவிடாதீர்கள், வெளிநாடுகளில் வதியும் ஈழத்தமிழர்கள் அதிர்ஷ்ட எண்களில் பெயர்களை அமைத்துவரின் குடியுரிமை பிரச்சினைகள் நீங்கி விடும்.

பத்தில் வியாழன் நீங்கியமை அதிர்ஷ்ட தேவதையின் அருள் நிச்சயம் கிடைக்கும்,02/09/2017 தொடக்கம் வருடமொன்றுக்கு 11ம் வீட்டுக்கு வருகை தரும் வியாழனால் தடைப்பட்டிருந்த கருமங்கள் வெற்றிக் கம்பத்தை அடைந்து விடும், வெளியூர் பயணம், திருமணம். அரசுப் பதவிகள், பரீட்சைகள், செய்தொழில், வங்கித் தொடர்பு, வீட்டுத் திட்டம், காதல், கடன் வசதிகள், வாகன யோகம், குழந்தைப் பாக்கியம், சுவீப் அதிர்ஷ்டம் என்பன அந்த மாதிரி உங்கள் பக்கம் சாதகமாக அமைந்து விடும், மூத்த சகோதரர்கள் மற்றும் பிதாவின் உதவியும் ஆதரவும் ஏற்படும், தங்களுக்கென்று சொந்த ராசியில்லாத ராகு, கேது என்பன முறையே 28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை 8ம்,2ம் நிலையில் நின்று ஈடுபடும் காரியங்களில் வேதனைகளை ஈட்டித்தந்து விடல், அந்நிய நாட்டுப் பெண்களை விவாகம் செய்யும் யோகம் ஏற்படல், குழந்தைப் பேறின்மையால் மனக்கவலை வாட்டும், வழக்கின் முடிவு சாதகமான நிலையில் இருக்கும், கன்னியருடன் சேட்டை விட்டதால் பொது மக்களின் தண்டனைக்கு உள்ளாதல், பாலியல் மற்றும் போதை வஸ்துப் பாவனையால் மானங்கப்பலேறல், விண்ணப்பித்திருந்த வங்கிக் கடன் கிட்டும் நிலையுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரம்

## (உத்தராடம் 2,3,4 / திருவோணம் / அவிட்டம் 1,2)

ஏழரைச் சனி 19/12/2017 தொடக்கம் 7½ ஆண்டுகளுக்கு நடைபெறப் போகின்றது, மகர ராசியில் சனீஸ்வரன் ஆட்சி பெற்ற படியினால் பயப்படக் கூடிய அளவிற்கு துன்ப துயரங்கள், கஷ்ட நஷ்டங்கள் ஏற்படாதெனினும் எச்சரிக்கையாகச் செயற்படுங்கள், புதிய நட்பினை முளையிலேயே கிள்ளி எறியுங்கள், முகவரின் திருவிளையாட்டால் பணத்தை இழந்து போகலாம், பெற்றோரின் வற்புறுத்தலால் காதலை கைவிட்டு விடலாம், குழந்தைப் பாக்கியம் பெற தமிழ்நாடு செல்ல நடவடிக்கை எடுத்தல்.

சில்லறைத் தட்டுப்பாட்டினால் தகராறுகள் முளைவிடும், இயன்றவரை இரவுப் பயணங்களைக் கைவிட்டு விடுங்கள், பழுதான உணவினால் தேகநலம் பாதிக்கப்படலாம், வெற்றுக் காசோலையில் கையொப்பம் இடவே கூடாது, வாடிக்கையாளர்களை கவர இன் சொற்களை பாவியுங்கள், வாய்ச் சம்பிரதாயம் மூலம் காரிய சித்திகள் ஏற்பட்டு விடும், புரோக்கர் காசு வாங்க முடியாது தவிக்கும் நிலையுருவாகும், பெற்றோரின் நினைவாக தானதர்மங்களை செய்ய முற்படுதல், படிக்கும்போது முகம் கிழக்குத் திசை நோக்கி இருப்பின் கல்வி விருத்தியுண்டாகும்.

சிவபெருமானையே மண்டை ஓட்டை ஏந்தி பிச்சை எடுக்க வைத்த வியாழன் 02/09/2017 தொடக்கம் 10ம் வீட்டில் ஒரு வருடம் வரை நிற்கும் காலத்தில் உடையவன் பாராவிட்டால் ஒரு முழம் கட்டை என்பது போல் செய் தொழிலில் போதிய கவனம் எடுத்தல், வெளியூர் பயணம் பிறர் உதவினால் செல்ல முயற்சித்தல், ஜாதகத்தின் திசா புத்தி அதிர்ஷ்டமாக இருப்பின் புதிய தொழில் ஆரம்பித்தல், திருமண விடயத்தில் பொறுமையைக் கடைப்பிடித்தல், கால் நடை வளர்ப்பில் ஈடுபாடு, மாற்றுப் பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டுதல், சத்திர சிகிச்சையினால் நோய் குணமடைதல்.

28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை சர்ப்பக் கிரகங்களான ராகு, கேது என்பன முறையே 7ம், 1ம் கோசர நிலைப்பாட்டில் நின்று ஈடுபடும் செயல்களில் பகீரதப் பிரயத்தனத்தனத்தின் பின்னரே வெற்றியைத் தருவார்கள், முதலாளி, தொழிலாளியாக மாறி விடலாம், கீரைக் கடைக்கும் எதிர்க்கடை முளைவிடும், ஆசிரிய, மாணவர்கள் உறவில் விரிசல் ஏற்படல், சட்டவிரோத செயல்களினால் காவல்துறையினருடன் முரண்பாடு வலுக்கும், நகைகள் சோடித்து திரிவதைக் கை விடவும். மறைமுக எதிரிகள் பற்றி விழிப்பாக இருக்கவும், செய்த நன்மையை மறந்து சகோதரர் செயற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பம்

## (அவிட்டம் 3,4 / சதயம் / பூரட்டாதி 1,2,3)

சனீஸ்வரன் இலாபச (11) சனியாக 2½ ஆண்டுகளுக்கு 19/12/2017 தொடக்கம் 19/06/2020 வரை உலா வருங்காலத்தில் வெற்றிகளையும் அதிர்ஷ்டத்தையும் கொண்டு வரும், 10ல் சனி நீங்கியதே பெருங் காரியமாகும், புதிய முயற்சிகளில் கால் பதியுங்கள், இதய சம்பந்தமான அடைப்புக்களுக்கு சத்திர சிகிச்சையை மேற்கொண்டு வாழ்நாளை நீடியுங்கள், வாகன யோகமுண்டு, நீண்ட காலத்தின் பின்னர் சொந்த மனை / நிலத்தில் கால் பதிக்கும் யோகமுண்டு.

இரவில் காணாக் கடியினால் அவதிப்பட நேரிடும், நோய்கள் குணமடைய ஆயுர்வேதம் மற்றும் மருந்தில்லா மருத்துவத்தையும் நாடத் தலைப்படுவர், உளநல விருத்திக்காக குடும்ப சகிதம் உல்லாச பயணத்தை மேற்கொள்வர், காரியம் பெறுவதற்காக உங்களைப் புகழும் ஆணையும், சிரிப்பையும், கண்ணீரையும் விடும் பெண்ணையும் நம்பி விடாதீர்கள், காணி உறுதியிலும், வங்கிக் கணக்கிலும் மோசடிகள் ஏற்படலாம், நீரிழிவு நோயின் தாக்கம் குறைய நடைப்பயிற்சியினை கைவிடாதீர்கள், அரிட்ட தோஷமுடைய சிறார்களை பிறருக்கு விற்று வாங்குங்கள்.

அட்டமத்து (8) வியாழன் 02/09/2017ல் நீங்கி 02/09/2018 வரை குரு 9ம் கோசரத்தில் நிற்கையில் வெளியூர் பயணம் அந்த மாதிரி நிறைவேற்றல் பிதாவினைப் பிரிய அல்லது இழக்க நேரிடல், பதவி முன்னேற்றத்துடன் இடமாற்றமும் ஏற்படல், புதிய மனை அமைக்க நிலத்துண்டு வாங்குதல், புதிய ஜீவன் உருவாதல், மாமி, மருமகள் உறவில் சுமுக நிலை ஏற்படல், புதிய இணைப்புக்களுக்கு சாதகமான பதில் கிடைத்தல், பழையதை விற்பனை செய்து புதியதை கொள்வனவு செய்தல், பேரப்பிள்ளைகளின் பாதுகாப்பில் போதிய கவனமெடுத்தல் வேண்டும், திருமணம், குழந்தைப் பாக்கியத்தில் தடை தாமதங்களை ஏற்படுத்தும், இராகு, கேது என்பன 28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை 6ம், 12ம் இடத்தில் நின்று தேவையற்ற செலவுகளை, சத்துருக்களை விலைக்கு வாங்கும் செயற்பாட்டிலும் ஈடுபட வைத்து விடும், ஆடம்பர பொருட்கள் வாங்க கடன்படல். பழைய மனையைப் புதுப்பித்தல், லீசிங் வாகனம் பறிமுதலாதல், கள்ள உறுதி தயாரித்தல், மனைவி தடுத்தும் பிறருக்கு உதவி செய்து மோசம் போதல், திருடரால் உடைமைகள் சூறையாடல், தற்கொலை எண்ணம், நித்திரைக் குழப்பம், மனநலம் பாதிப்பு என்பன ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனம்

## (பூரட்டாதி 4 / உத்தரட்டாதி / ரேவதி)

கண்டகச் சனியாக சனீஸ்வரன் 10ம் இடத்தில் 19/12/2017 தொடக்கம் 2½ ஆண்டுகளுக்கு நடமாடும் காலத்தில்செய்தொழிலை உயிரினும் மேலாகப் பாதுகாக்கவும், பங்குத் தொழிலில் பிரச்சினைகள் உருவாகலாம், தொழிலாளர் உறவில் விரிசல் தோன்றலாம், வெளிக்கிட்ட பயணம் இடைத்தங்கல் நாட்டில் இறக்கி விடலாம், அரச தண்டனையை எதிர்பாருங்கள், வழக்கின் முடிவு சிலருக்கு சாதகமான முடிவினைக் கொண்டு வரலாம்.

சந்திர மேட்டில் கறுப்பு மச்சம் இருப்பின் தண்ணீர்த்தத்தில் கவனமெடுக்கவும், அவசரம், ஞாபக மறதி மற்றும் ஞாபக இழப்பினால் பணக் கொடுக்கல், வாங்குதலில் பிரச்சினை உருவாகும், ஆணின் சனீஸ்வரன் பெண்ணின் சந்திரனை (தம்பதியர்) 3, 7, 10ம் பார்வை பார்ப்பின் மனைவியால் தீராத உபத்திரவம் ஏற்பட்ட வண்ணம் இருக்கும், சகுனங்களில் நம்பிக்கை வைத்துக் கருமம் ஆற்றினால் கெடுதிகள் அற்றுப் போகும், செவ்வாய் தோஷம் தம்பதியரின் வாழ்க்கையை பாதிக்கும் என்பதை மறக்க வேண்டாம்.

வாலியைப் பட்டமிழக்கச் செய்த அட்டமத்துக் குரு (8) 02/09/2017 தொடக்கம் 02/09/2018 வரை உங்களின் பலாபலன்களை தீர்மானித்தல், விபத்தில் அங்கப் பழுதுகள் ஏற்படலாம், காலாவதியான பொருட்களில் எச்சரிக்கையாக இருங்கள், பொறுப்பின்றிக் கொடுத்தவற்றை பெறக் காவல்துறை செல்லல், மனைவியின் புத்திமதியைக் கேட்பதால் மோசடி ஏற்படாமை, விலக்குப் பிடிக்கச் சென்று காயமேற்படல், சட்டவிரோத நடவடிக்கைகளினால் தண்டனை பெறல், மருத்தீட்டில் கவனம் எடுக்கவும், பரீட்சை முடிவு பாதிப்பினால் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தல்.

கிரகங்களைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர முயலும் இராகு, கேது என்பன முறையே 5ம், 11ம் இடத்தில் 28/07/2017 தொடக்கம் 28/01/2019 வரை உலாவருங்காலம் உங்களின் முன்னேற்றம் பிறர் வியக்கும் வண்ணம் அமைந்து காணப்படும், புதிய செயற்பாடுகள் இலாபத்தையும், முன்னேற்றத்தையும் தந்துவிடும், தெய்வ நம்பிக்கையினால் கஷ்டங்கள் விலகி விடும், பயணம், திருமணம், தொழில் பரீட்சை என்பன சரித்திரம் படைக்கும் நிலைக்கு வந்துவிடும் துர்க்கை அம்மனையும், கேதீஸ்வரப் பெருமானையும் வழிபட நன்மைகள் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டசாலியாவதற்கு கடைப்பிடியுங்கள்

| பிறந்த திகதிகள் | இரத்தினக் கற்கள் | அதிகஷ்ட நிறங்கள் | அதிகஷ்ட திகதிகள் | கூடாத திகதிகள் | துணைவர் பிறந்த திகதிகள் |
|---|---|---|---|---|---|
| 1-10-19-28 | மாணிக்கம் | மஞ்சள் | 1-10-19-4<br>13-22-31 | 8-17-26-28 | 4-13-22-31<br>8-17-26 |
| 2-11-20-29 | முத்து | இலேசான<br>பச்சை | 7-16-25 | 9-18-27<br>8-17-26 | 7-16-25 |
| 3-12-21-30 | செவ்வந்தி | செந்நிறம் | 3-12-21-30<br>9-18-27 | 6-15-24 | 3-12-21-30<br>9-18-27 |
| 4-13-22-31 | கோமேதகம் | நீலம் | 1-10-19-<br>4-12-22-31 | 8-17-26 | 1-10-19-28 |
| 5-14-23 | வைரம்/<br>ஸோர்க்கன் | சாம்பல் | 5-14-23-<br>9-18-27 | 2-11-20-29 | 5-14-23<br>9-18-27 |
| 6-15-24 | மரகதப்பச்சை | பச்சை | 9-18-27 | 3-12-21-30 | 6-15-24<br>5-14-23 |
| 7-16-25 | வைடூரியம் | வெள்ளை | 1-10-19<br>2-11-20-29 | 8-17-26-7-16 | 2-11-20-29 |
| 8-17-26 | நீலக்கல் | மஞ்சள்<br>நீலம் | 1-10-19<br>4-13-22-31 | 8-17-26 | 4-13-22-31<br>1-10-19-28 |
| 9-18-27 | பவளம் | சிவப்பு | 5-14-23-6-15<br>24-9-18-21-30 | 2-11-20-29 | 3-12-21-30-6<br>15-24-9-18-27 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| A | - 1 |
| B | - 2 |
| C | - 3 |
| D | - 4 |
| E | - 5 |
| F | - 8 |
| G | - 3 |
| H | - 5 |
| I | - 1 |
| J | - 1 |
| K | - 2 |
| L | - 3 |
| M | - 4 |
| N | - 5 |
| O | - 7 |
| P | - 8 |
| Q | - 1 |
| R | - 2 |
| S | - 3 |
| T | - 4 |
| U | - 6 |
| V | - 6 |
| W | - 6 |
| X | - 5 |
| Y | - 1 |
| Z | - 7 |

## மக்கள் சேவை மகேசனுக்கே

K- A S H V I N = 23

2- 1 3 5 6 1 5

★ குழந்தைகளுக்கு தேன் சிந்தும் அழகு சொட்டும் அதிர்ஷ்டமான பெயர் சூட்டித்தர.

★ வியாபார நிலையங்கள் இலாபத்தையும், முன்னேற்றத்தையும் அடைய அதிர்ஷ்ட கரமான பெயர்கள் அமைக்க.

★ உங்களுக்கு வளமான வாழ்வமைய அதிர்ஷ்ட எண்களில் கையெழுத்தினை ஏற்படுத்த.

★ திருமணப் பொருத்தம், ஜாதகம் மற்றும் எண் சோதிடம் மூலம் அந்தமாதிரி பார்த்துத் தர.

★ உத்தியோகத்தில் உச்ச நிலைக்கு வரும்படி பெயரினை/ கையொப்பத்தை வைக்க.

★ வெளியூரில் பிறக்கும் குழந்தைகளுக்கு அந்தந்த நாட்டு ஜனனமான இடத்தை வைத்து ஜாதக குறிப்பும், பலனும் எழுதித் தர/ அனுப்ப.

★ உள்ளூரில் பிறக்கும் மழலைக்கு வாக்கியம் அல்லது திருக்கணித பஞ்சாங்கப்படி ஜாதகங்கள் கணித்துத்தர.

★ கல்வியில் முன்னேற / நோய்கள் நீங்க / விவாகம் கைகூட அதிர்ஷ்ட இரத்தினங்கள் தருவதற்கு.

★ நாக தோஷம், காலசர்ப்ப தோஷம் அகன்று திருமணத்திற்கு முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் அம்சங்களை நீக்க, சர்ப்ப விளக்குப் பெற.

★ ஜாதி, மத பேதமின்றி சகல சமூகத்தினருக்கும் **"ஆனந்தி திருமண சேவை"** மூலம் மணமக்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தேடித்தருவதற்கு.

★ காரிய சித்திகளுக்கு கைவசம் கொண்டு செல்லும் இயந்திரங்கள் பெற.

★ மன்னவன் பிறந்தநாளும் மங்கையர் பூத்தநாளும் - ருது ஜாதகப் பலாபலன்கள் எழுதித் தர.

★ மனையடி சாத்திர விதி முறைகளுக்கேற்ப பொருத்தமான நிலத்தில் மனை அமைக்க நிலையம் தெரிவு செய்ய.

★ பழைய ஜாதகங்களில் காணப்படும் தவறுகளைக் கண்டறிந்து புதுப்பித்து தருவதற்கு.

★ உங்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும் நேரத்தில் கைரேகை / எண் ஜோதிடம் / ஜாதகம் மூலம் பலாபலன்களை அறிய.

★ கல்வெட்டுக்கள் எழுதித் தர, கிணறுகள் தெரிவு செய்ய.

**V.A. சிவராசா B.A.B; Phil; Dip.in Edu**

56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தொ.பே: **021 222 8708**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SSR Printers, Tel: 021 205 4168